# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2015 பிப்ரவரி திங்கள் 26—ம் நாள் (26.02.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண். 529/2015/சி2 நாள் 09.02.2015—ன்படி, இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு ஆண்டு சந்தா தொகையாக ரூ.2,500/— இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். சி1/271/2015)

**தீர்மான எண் : 1123 — அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, களிமார் பகுதியில் கதவு எண்.24—13—ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பின் வரிவிதிப்பானது வணிக பயன்பாட்டில் உள்ளது. மேற்படி கட்டிடமானது தற்போது பங்குதந்தை தங்கக்கூடிய இல்லமாக உள்ளது. எனவே மேற்படி கதவு எண்ணில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பின் வரிவிதிப்பை வீட்டு பயன்பாட்டு வரிவிதிப்புக்கு மாற்றம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/105/15)

**தீர்மான எண் : 1124 — அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தினசரி குப்பைகளை கொட்டுவதற்கு உப்பளம் அருகே அமைந்துள்ள உரக்கிடங்கில் 16.07.2014 முதல் மக்கும் குப்பை, மக்காத குப்பை என கொட்டப்பட்டு வருகிறது. உரக்கிடங்கில் பணிகள் முழுமையாக முடிவடையாததாலும், போதிய இடவசதிகள் இல்லாத காரணத்தினாலும், குப்பைகள் ஒரிரு மாதங்களில் நிறைந்து விட்டது. தற்போது குப்பைகள் கொட்டுவதற்கு இடவசதி இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் ஆணையரின் அறிவுரைப்படி ஏற்கனவே தொட்டிகளிலுள்ள மக்கிய குப்பைகளை எடுத்து பேக்கிங் செய்வதற்கும், மீதமுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தவும், உத்தேச செலவு ரூ.1,80,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். எச்1/1368/2014)

**தீர்மான எண் : 1125 — அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11—ல் துறைமுகத்தெரு பீச் சந்திப்பு முதல் காணிக்கை மாதா திருத்தலம் செல்லும் சாலையில் கதவு எண்.11—53—ன் அருகில் உள்ள குறுக்கு தெருவில்

குடிநீர் குழாய் உடைந்து குடிநீரில் கழிவுநீர் கலந்ததால், மேற்படி குடிநீர் குழாய் உடைவு ஏற்பட்ட இடத்தை கண்டறிய இயலாத நிலையில் , வடிகால் ஒடையின் மறுபக்கம் புதிதாக 90mm பி.வி.சி. வினியோக குழாய் அமைத்து பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக ரூ.1,38,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்டப் பிரிவு 15—ன் கீழ் பணியினை மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.1,38,000/— ஐ இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். இ2/1616—2/2014)

**தீர்மான எண் : 1126 — அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14—ல் துறைமுகத்தெரு பொழிமுகம் அருகில் மற்றும் வார்டு எண்.15—ல் காணிக்கை மாதா ஐஸ் பிளான்ட் அருகில் ஆகிய இடங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள கழிப்பிடங்களை இடித்து அகற்றி விட்டு உட்கட்டமைப்பு, இயக்குதலும், பேணுதலும் 2013—14 திட்டத்தின்கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் Universal Design Toilet கட்டும் பணிக்கு பலமுறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், எவரும் ஒப்பந்தப்புள்ளி அளிக்க முன்வராத நிலையில், திட்டப் பணியினை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்படி கழிப்பிடம் கட்டும் பணிகளை துறை மூலம் மேற்கொள்வதற்கு, இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1122 நாள் 30.01.2015—ன் மூலம் நகர்மன்ற அனுமதி பெறப்பட்டது. அதன் பின்னர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் 11.02.2015 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்ட நேரடி அறிவுரையில், மேற்படி பணிக்கு திருத்திய மறு மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணியினை விரைந்து முடிக்க தெரிவிக்கப்பட்டதால், திருத்திய மறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 27.02.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** (1) மேற்படி பணியினை துறை மூலம் மேற்கொள்வதற்கான இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1122 நாள் 30.01.2015 —ஐ மன்றம் ரத்து செய்யலாம்.

(2) பணியின் அவசர அவசியம் கருதி திருத்திய மறு மதிப்பீடு தயார் செய்து, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ1/2669/2013)

**தீர்மான எண் : 1127 — அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு தீர்மான எண் 1122 ரத்து செய்யப்பட்டது. திருத்திய மதிப்பீடு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால், டெங்கு நோய் தடுப்பு ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட நேரடி அறிவுரையின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக தினந்தோறும் குடிநீர் பரிசோதனை செய்வதற்கு தேவையான 4 எண்ணம் Chloroscope test kit மற்றும் 500 ml Spectrum O-Tolidine Reagent residual Chlorine ஆகியவை வாங்கும் பணியினை, அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டப் பிரிவு 15—ன்கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.3,155/— ஐ இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். இ1/130—2/15)

**தீர்மான எண் : 1128 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் குடிநீர் வினியோக பராமரிப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்களின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினமுரசு நாளிதழின் 11.02.2015–ம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் ரூ.2,250/–ஐ செலுத்த கேட்டு தினமுரசு நாளிதழ், நாகர்கோவில் அலுவலகத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/8058/2011)

**தீர்மான எண் : 1129 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சி குடிநீர் வினியோக வருடாந்திர பராமரிப்பு கூடுதல் பணிகள் 2014–15–க்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1064 நாள் 16.12.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 05.02.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.25% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/1616–2/2014)

**தீர்மான எண் : 1130 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரை புதிய குடிநீரேற்றும் நிலையம் எண்.4.ல் வயரிங் பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.78,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1061 நாள் 16.12.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 05.02.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.03% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.48% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.03% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/1579/2014)

**தீர்மான எண் : 1131 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் கிணற்றுக்குள் இருக்கும் இரண்டு ஆழ்துளை கிணறுகளுக்கு Outer Pipe இறக்கி மண் நிரப்பும் பணி மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,98,000/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1062 நாள் 16.12.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 05.02.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.R.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |
| 2. | திரு.P.பாலகிருஷ்ணன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.92% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.R.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.02% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/1580—4/2014)

**தீர்மான எண் : 1132 — அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சி அலுவலக வளாகம் மற்றும் வசூல் மைய தொடர் கண்காணிப்பிற்காக CCTV கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.46,000/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1079 நாள் 31.12.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 04.02.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Sri Vignesh Electronics,<br>Vadasery, Nagercoil. | மதிப்பீட்டு விகிதம். |
| 2. | M/s.Ramya Systems,<br>Ramanputhoor, Nagercoil. | மதிப்பீட்டைவிட 21.56% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Sri.Vignesh Electronics, Nagercoil நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2944/2014/AP)

**தீர்மான எண் : 1133 — அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சி வசூல் மைய பணிகளுக்கு தேவையான ரூபாய் நோட்டு எண்ணும் கருவி (Cash counting Machine with fake note detector) வாங்குவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.8,500/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1080 நாள் 31.12.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 04.02.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Sri.Vignesh Electronics,<br>Vadasery, Nagercoil. | மதிப்பீட்டு விகிதம். |
| 2. | M/s.Ramya Systems,<br>Ramanputhoor, Nagercoil. | மதிப்பீட்டைவிட 11.76% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Sri.Vignesh Electronics, Nagercoil நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2945/2014/AP)

**தீர்மான எண் : 1134 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் வருகை பதிவினையும் மின்னணு முறையில் பதிவு செய்வதற்கு தேவையான விரல் பதிவு செய்யும் கருவி (Finger Print Attendance Machine) பொருத்துவதற்காக மதிப்பீட்டுத் தொகை ரூ.25,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1081 நாள் 31.12.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 04.02.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Sri Vignesh Electronics, Vadasery, Nagercoil. | மதிப்பீட்டு விகிதம். |
| 2. | M/s.Ramya Systems, Ramanputhoor, Nagercoil. | மதிப்பீட்டைவிட 4.08% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Sri Vignesh Electronics, Nagercoil நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 2946/2014/AP)

**தீர்மான எண் : 1135 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.47965/2012/இ1 நாள் 12.04.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடியும், தமிழக அரசின் 2014–15–ம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்புகளின் அடிப்படையிலும், இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில், சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெறுவதற்கான தகடுகள் (Solar Roof top panels ) நிறுவி மின்கட்டணத்தை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் முதற் கட்டமாக நகராட்சி அலவலக கட்டிடத்தில் சூரிய ஒளியிலிருந்து 3KW மின்சாரம் பெறுவதற்கான தகடுகள் நிறுவுவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/179/2013)

**தீர்மான எண் : 1136 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சி 2010–2011–ஆம் ஆண்டின் முன்பண பதிவேட்டினை சரிபார்க்கப்பட்டதில், 1994–1995–ம் ஆண்டிற்கு ரூ.5,310/– நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான விவரங்கள் எதுவும் முன்பண பதிவேட்டில் இல்லை. எனவே இத்தொகையினை சட்ட ரீதியாக வசூலிக்க இயலாது என்பதாலும், 1994–95 ஆம் ஆண்டில் எழுப்பப்பட்ட தணிக்கை தடை பத்திகள் நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளதாலும், மேற்படி தொகையினை முன்பண பதிவேட்டிலிருந்து கழிவு செய்ய (Write off ) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/179/2013)

**தீர்மான எண் : 1137 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12961/2014/இ3 நாள் 08.02.2015–ன்படி EPRD (Establishing Plastic waste collection centres with Shredding machine Proposed under Environment Protection and Renewable Energy Development fund) 2014–15 திட்டத்தின்கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பிளாஸ்டிக் உடைப்பு இயந்திரத்துடன் கூடிய சேகரிப்பு மையம் மற்றும் இயந்திர அறை (Plastic waste Collection Centres with Shredding machine ) அமைப்பதற்கு ரூ.14.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். இ1/376/2015)

**தீர்மான எண் : 1138 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 17**

2014–15–ம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குத்தகை நிலுவை, லைசென்ஸ், கடை வாடகை மற்றும் இதர உரிமக் கட்டணங்களை உடனடியாக செலுத்த கேட்டு இந்நகராட்சி பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் 13.02.2015 முதல் 31.03.2015 வரை விளம்பரம் செய்ய பணியின் அவசர அவசியம் கருதி 05.02.2015 அன்று நேரடியாக பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு :

| வ.எண். | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் | விலைப்புள்ளி விகிதம் நாள் ஒன்றுக்கு (மைக்செட், டீசல், பெட்ரோல், ஆயில் உட்பட) |
|---|---|---|
| 1 | பிரவின் சவுண்ட்ஸ், குளச்சல். | ரூ. 1,450/– |
| 2 | அஜின் சவுண்ட்ஸ், குளச்சல். | ரூ. 1,700/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் பிரவின் சவுண்ட்ஸ் நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) பிரவின் சவுண்ட்ஸ், குளச்சல் நிறுவனத்தின் ரூ.1,450/–க்கான குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

2) அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். அ1/4826/2007)

**தீர்மான எண் : 1139 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த விலை புள்ளி ஏற்று கொள்ளப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

**(உண்மை நகல்)**

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி